Paper ID: IDU03

# கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்வியல்: ஜுனைதா ஷெரீபின் சாணைக் கூறை நாவலினை மையப்படுத்திய ஆய்வு

**Fathima Sahra Junaideen**

Fourth Year, Specialization in Tamil, Department of Languages, Faculty of Arts & Culture
South Eastern University of Sri lanka,
Sri Lanka.
zahrajunaideen610@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

புனைக்கதை இலக்கியங்களுள் ஒன்றான நாவல் இலக்கியங்கள் சமூகத்தின் அனைத்து விடயங்களையும் பிரதிபலிக்கும் ஒன்றாக கருதப்படுகின்றது. 1980 ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட காலத்தில் வாழ்ந்த கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்வியல் குறித்து அறியக் கிடைக்கும் இலக்கிய படைப்புக்களுள் ஜுனைதா ஷெரீபினால் எழுதப்பட்ட சாணைக் கூறை எனும் நாவல் குறிப்பிட்டுக் கூற வேண்டிய ஒன்றாகும். இந்நாவலில் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் சமூக, கலை, கலாச்சார, பண்பாட்டு அம்சங்கள் அனைத்தும் விரிவாக விளக்கப்படுவதாக அமைந்துள்ளது. மேலும் அக்கால மக்களின் மூட நம்பிக்கைகள், அறியாமை என்பவற்றினை எடுத்துக் காட்டுவதாக இந்நாவல் அமைந்துள்ளது. இவ் வாய்வின் மூலம் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்வியல் அம்சங்கள் எவ்வாறு இருந்தன என்பவை தொடர்பாக ஆராய்வதுடன் அக்கால மக்களின் அறியாமை மூட நம்பிக்கைகளை ஆசிரியர் கேள்விக்குறியாக்கும் விதம் தொடர்பாகவும் ஆய்வு செய்யப்பட்டள்ளது. இதன் மூலம் ஜுனைதா ஷெரீபின் படைப்பாளுமை, சாணைக் கூறை நாவலின் தனித்துவம், கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்வியல் குறித்தும் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

**திறவுச்சொற்கள்:** ஜுனைதா ஷெரீப், கிழக்கிலங்கை முஸ்லிம்கள், வாழ்வியல், சாணைக் கூறை

## 1. அறிமுகம்

இலக்கியங்கள் காலம் காட்டும் கண்ணாடியாகும்.இலக்கியப் படைப்புக்களில் படைப்பாளியின் சூழல் அந்ந அந்தச் சமூகத்தின் வாழ்வியலை வெளிப்படுத்துவதாக அமையும். கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்வியலை உலகிற்கு எடுத்துக் காட்டும் பல்வேறு இலக்கியப் படைப்புக்கள் காலந்தோறும் தோன்றிய வண்ணம் உள்ளன.அவற்றின் மூலம் அப் பிரதேச மக்களின் வாழ்வியல் அம்சங்கள் யாவும் பிர மக்கள் முழுமையாக அறியலாம். கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்வியல் குறித்து அறியக் கிடைக்கும் படைப்புக்களுள் சாணைக் கூறை நாவலும் ஒன்றாகும்.இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் ஒலிபரப்புச் செய்யப்பட்டு பின்னர் 1984 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தினகரன் பத்திரிகையில் தொடர் கதையாக வெளிவந்த நாலலே சாணைக் கூறையாகும்.இதன் ஆசிரியர் ஜுனைதா ஷெரீப் ஆவார்.இவர் கிழக்கிலங்கையின் காத்தாங்குடி பிரதேசத்தைச் சேர்ந்தவர்.இந் நாவலில் நாட்டார் வழக்காற்றுக் கூறுகள் மிகுதியாகப் பேசப்பட்டுள்ளன.வட்டார வழக்குகள்,சடங்குகள்,கலை கலாச்சாரங்கள் என்று பலவும் பதிவு செய்யப்பட்டுள்ளன.மேலும் இந் நாவலில் இஸ்லாத்தில் இல்லாத வரதட்சனை பழக்கம் குறித்தும் பேசப்படுகின்றது.முஸ்லிம் பெண்கள் பருவ வயதை அடைந்தவுடன் பாடசாலை செல்லக் கூடாது என்ற தடை,பேய்,பிசாசு பற்றிய நம்பிக்கை,மக்களின் அறியாமை என்பவை குறித்தும் பதிவு

செய்யப்பட்டுள்ளன.குழந்தை பிறந்ததிலிருந்து மரணிக்கும் வரையான கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களின் சடங்கு சம்பிரதாயங்கள் யாவும் விரிவாக விளக்கப்படுகின்றன.

மேலும் கிழக்கிலங்கை கிராமிய விளையாட்டுக்களும் நாட்டார் பாடல்களும் நாவலில் சித்தரிக்கப்பட்டுள்ளன.இந் நாவலின் சாரம்சமாக கிழக்கிலங்கை வாழ் முஸ்லிம்களின் சாணைக் கூறையிடும் கலாச்சாரம் இந் நாவலில் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது.

## 2. ஆய்வின் நோக்கம்

### 2.1. பிரதான நோக்கம்

கிழக்கிலங்கை வாழ் முஸ்லிம்களின் வாழ்வியல் குறித்து ஆராய்வதே இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

### 2.2. துணை நோக்கம்

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கலாச்சாரங்களையும் மூட நம்பிக்கைகளையும் ஆசிரியர் கேள்விக் குறியாக்கும் விதம் தொடர்பாக ஆராய்வதே இவ் ஆய்வின் துணை நோக்கமாகும்.

## 3. தகவல் சேகரிப்பு

ஜுனைதா ஷெரீபின் சாணைக் கூறை எனும் மூல நூல் முதன்மை நிலை தரவாகவும் ஜுனைதா ஷெரீப் தொடர்பாக வெளிவந்த சஞ்சிகை கட்டுரைகள்,இவரது நூல்கள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் எடுத்துக்கொள்ளப்பட்டன.இவ் ஆய்வுக்கென பண்பு சார் தரவுகள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டன.

## 4. ஆய்வு முறையியல்

இவ் ஆய்வானது கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்வியல் குறித்து ஆராயப்படுவதால் அவற்றினை விளக்கியுரைப்பதற்காக விளக்கியவியல் அணுகுமுறை கையாளப்படுகின்றது.

## 5. கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்வியல்

### 5.1. சடங்கு, சம்பிரதாயங்கள்

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் சகல சடங்கு,சப்பிரதாயங்களும் இந் நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.குழந்தை பிறந்து நாற்பதாவது நாள் கொண்டாட்டம்,புது நெல் அரிசிச் சோறு சமைக்கும் கொண்டாட்டம்,திருமணச் சடங்கு முறை,நேர்ச்சை தீர்க்கும் சம்பிரதாயம்,முஸ்லிம் ஆண்களுக்கு செய்யப்படும் 'சுன்னத்'வைபவம்,ஹஜ் கடமையை நிறைவேற்ற மக்கா நகர் செல்வோர் வழங்கும் 'மௌலூது' விருந்து,வெளியூர் சென்று வருவோருக்கு 'ஆராத்தி' எடுக்கும் வைபவம்,பூப்படையும் சடங்கு,மரணச் சடங்கு என மனிதனின் வாழ்வில் இடம்பெறக் கூடிய சகல நல்ல,கெட்ட சடங்கு,சப்பிரதாயங்களையும் இந் நாவல் விபரித்துள்ளது.

ஒவ்வொரு சடங்குகளும் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன,அச் சடங்குகளுக்கு பயன்னடுத்தப்படும் பொருட்கள்,அலங்காரங்கள் என அனைத்தும் கூறப்படுகின்றன.பெண் குழந்தை பிறந்தால் அதன் முறை மாப்பிள்ளை வீட்டாள் சாணைக் கூறை (பட்டாடை) இடும் முறை குழந்தை பிறந்து நாற்பதாவது நாள் விஷேசத்தின் போது இடம் பெறும் வழக்கம் கிழக்கிலங்கை வாழ் முஸ்லிம்களின் மத்தியில் இருந்து வந்துள்ளது.அக்கால கிழக்கிலங்கை முஸ்லிம்களிடம் காணப்பட்ட திருமணச் சடங்கு முறைகள் இக்காலத்தினை விட முற்றிலும் மாறுபட்ட விதத்தில் நடைபெற்று வந்துள்ளமையினை நாவலினூடாக அறியலாம்.பறை அடித்து திருமணத்திற்கு அழைப்பது,நல்ல விடயங்கள் செய்யும் போது குலவை ஒலி எழுப்புவது,மாப்பிள்ளையின் கால் கழுவி பெண் வீட்டினுள் எடுப்பது,இரு வீட்டாருக்கும் இடையில் மருதாணி பரிமாறும் சம்பிரதாயம் என இன்னோரன்ன

அம்சங்கள் திருமண வைபவத்தின போது கிழக்கிலங்கை முஸ்லிம்களால் பின்னற்றப்பட்டு வந்தமையை அறியலாம்.அவை பெரும்பாலும் தமிழர் கலாச்சாரங்களை அடியொட்டியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.நோய்கள் ஏற்படும் போது இறைவனுக்கு நேர்ச்சை வைத்து பின் நோய் தீர்ந்ததும் மஞ்சள் சோறு சமைத்து அதனை கடலில் கலந்து நேர்ச்சை தீர்க்கும் சம்பிரதாயம் இம் முஸ்லிம்களிடம் காணப்பட்டது.இவை எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன என்பது தொடர்பாக விரிவாக நாவலில் அறியக் கிடைக்கிறது.இவ்வாரே மேற்கூறப்பட்ட சகல சடங்கு முறைகளும் நிறைவேற்றப்படும் முறையை நாவலில் காணலாம்.

### 5.2. வட்டார வழக்கு

கதைக் களம் எதுவோ அவ் விடத்தின் பேச்சுத் தமிழில் புனைக் கதை இடம்பெறுவது சிறப்பு.அந்த வகையில் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பேச்சு வழக்குச் சொற்கள் இந் நாவலில் விரவி காணப்படுகின்றன.ராத்தா-அக்கா, ஒஸ்தா மாமா-முடி வெட்டுபவன், செப்பு-உணவுப் பொட்டலம், வாராகா-வருகிறார்கள், மதிரோண்டி-மருதாணி, துஆ-பிரார்த்தனை, ஊரோடி-அம்மை கொப்பளிப்பான் போன்ற நோய்கள், ஸஹர்-அதிகாலை போன்ற சொற்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்.இவற்றுள் அநேகமான சொற்கள் சகல முஸ்லிம் சமூகத்தினாலும் பயன்படுத்தப்படும் அரபு மொழிச் சொற்கள என்பது குறிப்பிடத்தக்கது.இந் நாவலின் சகல கதாபாத்திரங்கள் மூலமாகவும் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பேச்சு வழக்கை அறியக் கூடியதாக உள்ளது.

### 5.3. கிராமிய விளையாட்டுக்கள்

இந் நாவலின் பிரதான கதாபாத்திரங்களான நவாஸ்,நஜீமா ஆகிய இருலரும் துணை கதாபாத்திரமான மஜீதும் சிறுவயதில் விளையாடிய கிராமிய விளையாட்டுக்கள் சில நாவலில் சித்தரிக்கப்பட்டுள்ளன.இவ் விளையாட்டுக்கள் கிழக்கிலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தில் விளையாடப்பட்ட விளையாட்டுக்களேயாகும்.அவையாவன,

- சூ விளையாட்டு , வார் விளையாட்டு
- சறுக்கால் விளையாட்டு , முந்திரிக்கொட்டை விளையாட்டு
- கோலிக் குண்டு விளையாட்டு , ஊத்து ஊஞசள்
- சில்லுக் கட்டை விளையாட்டு

போன்ற விளையாட்டுக்கள் நாவலில் குறிப்பிடப்பட்டுள்ளன.அவை எவ்வாறுவிளையாடப்படுகின்றன என்பது தொடர்பாகவும் நவாஸ் கதாபாத்திரம் மூலம் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

### 5.4. கிராமியப் பாடல்கள்

கிழக்கிலங்கை ˙ முஸ்லிம்களிடத்தில் பாடப்பட்டு வந்த நாட்டார் பாடல்கள் சிலவும் இந் நாவலில் குறிப்பிடப்பட்டுள்ளன.தாலாட்டு,ஊஞ்சள் ஆடும் போது பாடப்படும் பாடல்,கப்பல் பாடல் என சில நாட்டார் பாடல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.இவை அனைத்தும் குழந்தைகளால் பாடப்பட்டவையாகும்.

### 5.5. உணவுப் பழக்கங்கள்

திருமண வைபவம்,பிள்ளை பிறந்து நாற்பதாவது நாள் வைகவங்களின் போது அரிசிமா ரொட்டியும் இறைச்சிக் கறியும் பரிமாறும் வழமை கிழக்கிலங்கை வாழ் முஸ்லிம்களிடத்தில் காணப்பட்டுள்ளது.மேலும் விருந்தினர்களை கவனிக்க சீனிமா,கேலியப்பம்,சட்டியப்பம்,கறுப்பு நிற ஹல்வா போன்ற திண்பண்டங்கள் செய்யப்பட்டுள்ளன.மேலும் புதிர் சாப்பாடு (புது நெல் அரிசிச்

சாப்பாடு) நிகழ்வுகளின் போது சோறு,கறி என்பவற்றுடன் அரிசிமாப் பாணி எனும் உணவு வகையும் பரிமாறப்பட்டுள்ளன.மஞ்சள் சோறு,முட்டை பொரியல் போன்ற உணவு வகைகள் நேர்த்திக் கடன் தீர்ப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ளன.நோன்பு காலங்களில் அரிசிக் கஞ்சி காய்ச்சப்பட்டுள்ளதுடன் பெருநாள் காலங்களில் இடியப்ப பலகாரம்,சீனிப் பலகாரம்,கொட்டுப் பலகாரம்,சோகி,கைவீச்சு,அச்சுப் பலகாரம்,முந்திரிப் பருப்பு,பயிற்றுப் பலகாரம்,துள்ளு மா,வட்டிலப்பம் போன்ற பல திண்பண்டங்கள் செய்யப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 5.6. கலை கலாச்சார நிகழ்வுகள்

இம் மக்களிடம் அனைத்துக் கொண்டாட்டங்களின் போதும் வெடில் பற்ற வைக்கும் கலாச்சாரம் காணப்பட்டுள்ளது.முறைப் பெண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டால் சாணைக் கூறை எனம் பட்டாடை அணிவிக்கும் கலாச்சாரம்,உறவினர்களுக்கு 'செப்பு' (உணவுப் பொட்டலம்) அனுப்பும் கலாச்சாரம்,பெருநாள் காலங்களில் ‘மெத்தை வீடு’ எனும் அலங்கார கோபுரம் அமைக்கும் கலாச்சாரம்,நோன்பு காலங்களில் நோன்பு நோற்க மக்களை எழுப்புவதற்காக பக்கீர்கள் (பரம ஏழைகள்) ஸலவாத்(நபியவர்கள் புகழ் பாடுதல்) கூறி சப்தமிடுதல்,நோன்பு காலங்களில் மகளிர் பிரசங்கம் கேட்க செல்லுதல், நோன்புக் கஞ்சி காய்ச்சுதல், நோன்பு இரவுகளில் திருக்குர் -ஆன் ஓதுதல்,இரவு வணக்கங்களில் ஈடுபடுதல்,ஸகாத்(தர்மம்) செய்தல், கடைசி நோன்பில் பெருநாள் பிறை பார்க்க கடற்கரையில் ஒன்று கூடுதல்,பெருநாளைக்கு முன் தினம் இரவுகளில் காஸ் லைட்டுக்களில் இரவுச் சந்தைகள் இடம் பெறுதல் போன்ற கலாச்சாரங்களும் கல்யான வீடுகளில் பந்தல் கட்டி,குருத்தோலையால் அலங்கரித்து,செம்புக் குடங்களில் தென்னம்பாலை விரிய விடப்பட்டு குத்து விளக்கேற்றி மணவரை அலங்காரம் செய்தல்,ஏழு பாய் போடப்பட்டு மணப்பெண்ணின் கட்டில் அலங்கரிக்கப்படுதல் போன்ற கலாச்சாரங்கள் கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களிடம் காணப்பட்டுள்ளது.

மேலும் கத்னா வைபவ வீடுகளில் பெரிய பந்தல் இட்டு அலங்காரம் செய்தல், கத்னா செய்யப் போகும் சிறுவனை ஊர்வலமாக அழைத்து வருதல்,ஹஜ் கடமையை நிறைவேற்ற மக்கா நகர் செல்ல இருப்போரிடம் ஸலாம் கூறி ஆளையாள் அரவனைத்து பிரார்த்தனை செய்யும் கலாச்சாரம் போன்றவையும் இருந்து வந்துள்ளமையினை அறியலாம்.மேலும் ‘சகனில்’(பெரிய பீங்கான்) நான்கு பேர் சோந்து கூடி உண்ணும் முறை,ஹஜ் பெருநாளைக்கு முன் தினம் பொதுவாக சகல வீடுகளிலும் வண்ணத்தாள்களால் அமைக்கப்படும் சந்தனக் கூடு ஏற்றம் வழமை ஒன்று அக்கால கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களிடம் காணப்பட்டதாக நாவலின் மூலம் அறியக் கிடைக்கின்றது.’தக்பீர்’(அல்லாஹு அக்பர்)எனக் கூறி பெருநாள் குளிப்பு குளிக்கும் கலாச்சாரம்,பெருநாள் தொழுகை தொழுதல் போன்ற கலாச்சாரங்களும் ‘உத்து ஊஞ்சள்’ எனப்படும் ஒரு வகை விளையாட்டு பெருநாள் அன்று விளையாடும் கலாச்சாரமும் இருந்து வந்துள்ளதுடன் இறந்தவர்களுக்காக ஊது பத்தி ஏற்றி பிரார்த்திக்கும் வழமையும் காணப்பட்டுள்ளது.

அக் காலத்தில் வாழ்ந்த கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களின் ஆடையணிகலன்கள் பற்றி நோக்கும் போது கொண்டாட்டங்களின் போது பெண்கள் ‘காரைக்கால் சோமன்’ எனும் ஒரு வகை சாரியை அணிந்துள்ளனர்.ஆண்கள் கோத்து வாங்கி சால்வையால் உடலைப் போர்த்தி தலையில் தொப்பி அணிந்துள்ளனர்.ஆண் சிறுவர்கள் சேட் அணிந்து சாரன் உடுத்தியுள்ளனர்.வயதான பெண்கள் வெள்ளை பிடவை உடுத்தியுள்ளனர்.திருமண வைபவங்களின் போது மாப்பிள்ளை சாரன் அணிந்து அரைக் கை சேட்,தலையில் நீண்ட கருப்புத் தொப்பி,சால்வை போன்றவை அணிந்துள்ளனர்.கத்னா வைபவங்களின் போது கத்னா செய்யப் போகும் சிறுவனுக்கு தலையில் துருக்கித் தொப்பி அணிந்து நீண்ட கைகள் கொண்ட சேட் உடுத்து கழுத்தில மாலை அணிவித்துள்ளனர்.

இம் மக்களின் கலை நிகழ்வுகள் பற்றி பார்க்கும் போது திருமண வைபவங்களின் போது பாட்டுப் பெட்டியில் பாட்டு இசைப்பது வழமையாக இருந்துள்ளது.பாட்டுப் பெட்டி எவ்வாறு இருந்தது என்பது தொடர்பாகவும் இந் நாவலில் விபரிக்கப்பட்டுள்ளது.கொண்டாட்டங்களின் போது பொதுவாக கத்னா வைபவங்களின் போது மேளம்,தவில்,நாதஸ்வரம் போன்றவை இசைக்கப்பட்டும் கத்னா ஊர்வலங்களின் போது களிகம்பு அடித்தல்,கம்பு விளையாடுதல்,வாள்,கத்தி,கிரிஸ் விளையாடுதல் போன்ற கலை நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.பெருநாள் காலங்களில் கோடு கச்சேரி,பஜனை போன்ற கலை நிகழ்வும் இடம்பெற்றுள்ளன.

### 5.7. சமய நம்பிக்கைகள்

இந் நாவலில் வட்டிக்கு பணம் கொடுப்பது இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டுள்ளது என கூறப்படுகின்றது.மேலும் நோன்பு காலங்களில் நல்ல விடயங்களில் ஈடுபடல்,நோன்பு இரவுகளில் அதிகமாக திருக்குர்-ஆன் ஓதுதல்,இரவு வணக்கங்களில் ஈடுபடல் என்பவை இம் மக்களிடம் காணப்பட்ட சமய நம்பிக்கைகள் ஆகும்.இவர்களின் சமய நம்பிக்கையின் உச்ச கட்டமாக நோன்பு மாதத்திற்கு மதிப்பளிக்கும் வகையில் பகல் வேலைகளில் சாப்பாட்டுக் கடைகள் மூடப்பட்டுள்ளன.இம் மக்கள் அல்லாஹ்விற்குப் பயந்து தமது ஸகாத் கடமையை நிறைவேற்றியுள்ளனர்.திருடுவது பாவச்செயலாகும் எனும் சமய நம்பிக்கையும் தமது தேவைகளை நிறைவேற்ற இறைவனிடம் பிரார்த்திக்கும் வழமை போன்ற சமய நம்பிக்கைகள் காணப்பட்டமையினை நாவலின் மூலம் அறியலாம்.

### 5.8. அறியாமையும் மூடநம்பிக்கைகளும்

இம் மக்களிடம் அறியாமையும் மூடநம்பிக்கைகளும் விரவி காணப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.கணவன் மனைவி இருவரும் அருகருகே நடந்து செல்வதனை இம் மக்கள் கௌரவக் குறைச்சலாகக் கருதியுள்ளனர்.தாய்க்குத் தலைப் பிள்ளையை பிடித்துச் சென்று குளம் கட்ட,புதையல் எடுக்க பலி கொடுப்பார்கள் எனும் அறியாமைத் தனம் சிறுவர்களிடம் காணப்பட்டுள்ளது.மேலும் நோய்கள் ஏற்படும் போது அரிசி,முட்டை வைத்து நேர்த்தி வைத்தல் போன்ற மூடத்தனங்களும்

வெள்ளிக் கிழமை மதியம் பெண்கள் தனியே சென்றால் 'பார்வை' விழுந்து காய்ச்சல் வரும் என்ற மூடநம்பிக்கையும் அவற்றுக்கெல்லாம் 'குழை' அடித்தால் சரியாகிவிடும் எனும் அறியாமையும் காணப்பட்டுள்ளது.பிரசவத்தின் போது தாய்மாருக்கு குழந்தை பிறக்க தாமதம் ஏற்படும் போது பார்வை விழுந்ததாக எண்ணி குழை அடித்து உலக்கை எறியும் மூடத்தனம் காணப்பட்டுள்ளது. உலக்கை விழும் போது குழந்தை பிறக்கும் எனும் மூடத்தனமும் தீராத நோய்களுக்கு காரணம் பேய்,பிசாசுகளே என்கின்ற மூடத்தனமும் அதற்கு சூனியம் வெட்டும் அறியாமையும் இம் மக்களிடம் காணப்பட்டுள்ளது.

## 6. கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கலாச்சாரங்களையும் மூடநம்பிக்கைகளையும் ஆசிரியர் கேள்விக்குறியாக்கும் விதம்.

இந் நாவலின் கருப்பொருளான சாணைக் கூறை இடும் கலாச்சாரத்தை ஆசிரியர் கேள்விக்குறியாக்கியுள்ளார்.நவாஸ்-நஜீமா என்ற கதாபாத்திரங்களுக்கு இடையே சிறுவயதிலேயே திருமணம் நிச்சயிக்கப்பட்டு சாணைக் கூறை இட்டும் அவர்களுக்கு திருமண வயதனவுடன் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக நஜீமா வேறு ஒருவரை திருமணம் முடிக்கிறாள்.பின் அவள் கணவனை இழந்து விதவையானவுடன் நவாஸ் அவளை இரண்டாந்தரமாக மணக்க அனுமதி பேட்கும் போது அவள் மறுத்து,அவனின் கைகளில் அவன் பெற்றோர் நஜீமாவிற்காக இட்ட சாணைக் கூறையையும் திருப்பி அனுப்புகிறாள்.இதன் மூலம் ஆசிரியர், சாணைக் கூறை இட்டவர்களை தான் திருமணம் முடிக்க

வேண்டும் என்கின்ற விதிமுறையை இல்லாமலாக்குகிறார்.மேலும் தீராத வியாதிகளுக்கு முறையாக மருத்துவம் செய்யாது குழை அடித்தல்,சூனியம் வெட்டுதல் போன்றவற்றால் அநியாயமாக ஒரு உயிர் பிரிந்ததாக சித்தரித்து மக்களின் மூட நம்பிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கிறார்.காய்ச்சல் வரும் போது நேர்த்தி வைத்து அதனை கடலில் கழிப்பதாக கூறி செய்யும் சடங்கை நாவலில் ஒரு வினாக்கறியின் மூலம் முற்றுப் படுத்துகிறார்.நவாஸ் என்ற கதாபாத்திரம் அவனது மாமியினால் உதாசீனப்படுத்தப்படுத்தப்பட்டு துரத்தியடிக்கப்படுகிறான்.பின் அவன் படித்து முன்னேறி ஒரு வைத்தியராக வருகிறான்.இதன் மூலம் மனிதர்கள் எவரும் பீடை பிடித்தவர்கள் அல்லர்.முயன்றால் முடியாதது எதுவுமல்ல எனக் கூறி மக்களின் மூட நம்பிக்கைகளகும் அறியாமைக்கும் முற்றுப் புள்ளி வைக்கிறார்.

## 7. முடிவுரை

தொகுத்து நோக்குகின்ற போது கிழக்கிலங்கை வாழ் முஸ்லிம்களின் வாழ்வியல் அம்சங்கள் புரையோடிக் காணப்படும் ஓர் புனைக்கதை இலக்கியப்படைப்பாக சாணைக் கூறை நாவலினை கூறலாம்.ஆசிரியரின் மொழி நடை,சொல்லாட்சி,பாத்திர வார்ப்பு,கதை நகர்த்தும் உத்தி என்பன கதையின் சுவாரஷ்யத்தை அதிகரிக்கின்றது.இறுதியாக சாணைக் கூறை இடும் கலாச்சாரத்தை கேள்விக்குறியாக்குகிறார்.ஆனால் அதில் அவர் வெற்றி கண்டுள்ளாரா என்பதில் சந்தேகமே.காரணம் நவாஸ் திருமணம் முடிக்காது நஜீமாவையே நினைத்து வாழ்பவனாக கதை முடிகின்றது. சாணைக் கூறை இட்டு தன் மனதில் சிறுவயதிலேயே மனைவியாக பதித்தவளை அவ்விடத்தில் இருந்து அகற்றவோ அவ்விடத்திற்கு வேறு ஒரு பெண்ணை குடியமர்த்தவோ முடியாதவளாக நவாஸ் கதாபாத்திரம் சித்தரிக்கப்பட்டுள்ளமையானது சாணைக் கூறையை ஆசிரியர் கேள்விக்குறியாக்கியும் வெற்றி காணவில்லை என்பதனை புலனாக்குகின்றது.எவ்வாறாயினும் கிழக்கிலங்கை ' முஸ்லிம்களின் வாழ்வியலை ஆசிரியர் புலப்படுத்துகிறார்.

## 8. உசாத்துணை


1. ஜுனைதா ஷெரீப்.(1985).சாணைக் கூறை.தமிழ் மன்றம்:கல்ஹின்னை
2. ஜின்னாஹ் ஷரீபுதீன்.(2013 ஒக்டோபர்).''இலக்கிய வித்தகர் கலாபூஷணம் ஜுனைதா ஷெரீப்''.ஞானம் (161).ஞானம் அலுவலகம்:கொழும்பு
3. நஜ்மா,மு. வேலிக்கு அடியில் நழுவும் வேர்கள்-இஸ்லாமியப் புனைவுகள்.http://keetru.com/index.php?option=com-content&view=article&id=12234&ltemid=139
4. பர்சானா,எம்.ஐ.(2002) ஜுனைதா ஷெரீபின் நாவல்கள்-ஒரு மதிப்பீடு,கல்வி இளமாணிக் கற்கை. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகம்